ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2172/9 - 2020 අප්‍රේල් මස 22 වැනි බදාදා - 2020.04.22
*2172/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் செய்யப்படும் பணிப்புரை**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

**சனாதிபதியின் பணிப்புரை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்காகச் செயலணியொன்றை நிறுவுதல்.*

1. திரு.பசில் ராஜபக்ஷ
   சனாதிபதியின் விசேட பிரதிநிதி
2. கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்கள்
   சிரேட்ட பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
3. லுதினன் ஜெனரால் சவேந்திர த சில்வா அவர்கள்
   பாதுகாப்பு பதவிநிலை பிரதானி / தரைப்படை
4. திரு.டி.சி.விக்கிரமரத்ன பதில் பொலிஸ்மா அதிபர்
5. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சாந்த திசாநாயக்க
   தலைவர், நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை
6. திரு.ஜே.ஏ.நுஷாட் எம் பெரேரா
   தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. திரு.சுசந்த ரத்நாயக்க
தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை

8. திரு.ஜயந்த டி சில்வா
தலைவர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

9. திருமதி. கிமாலி பெர்ணாந்து
தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

10. திரு.ஜயம்பதி மொல்லிகொட
தலைவர், இலங்கை தேயிலைச் சபை

11. திரு.பிரபாத் சுபசிங்க
தலைவர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

12. திரு.ஏ.விமலவீர
தொழில் ஆணையாளர் நாயகம்

13. திரு.எஸ்.சிங்கப்புலி
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

14. ரியல் அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

15. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜி.விஜித ரவிபிரிய அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்

16. திரு.பந்துல திலகசிறி
பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

17. திரு.சஞ்ஜய மொஹொட்டால
பணிப்பாளர் நாயகம், இலங்கை முதலீட்டுச் சபை

18. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுதந்த ரணசிங்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

19. திரு.மஹேஷ் கம்மம்பில
பணிப்பாளர், உரச் செயலகம்

20. திரு.புத்திக மடிஹஹேவா
முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

21. திரு.ரொஹான் செனெவிரத்ன
மேலதிக முகாமையாளர், இலங்கை மின்சார சபை

22. திரு.மனோ சேகரம்
பணிப்பாளர் சபை உறுப்பினர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

23. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா

24. திரு.சஞ்ஜீவ குணவர்த்தன
நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ.டப்ளிவ். கிறீசி மற்றும் கம்பனி

25. திரு.சமந்த குமாரசிங்க
தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

26. திரு.மஹேஷ் அமலியன்
தலைவர், மாஸ் ஹோல்டிங்ஸ்

27. கலாநிதி ரவி லியனகே அவர்கள்
தலைவர், ரைகம் நிறுவனம்

28. திரு.பத்மலால் லியனகே
முகாமைத்துவப் பணிப்பாளர், சென்மிக் சமூக வியாபாரம்

29. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்

30. பிரமதரின் செயலாளர் மற்றும் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவம், மின்சக்தி மற்றும் வலுசக்தி, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு, மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள், பாதுகாப்பு, உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை, வெளிநாட்டு தொடர்புகள் ஆகிய அமைச்சுகளின் செயலாளர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

உலகம் முழுவதிலும் பரவியுள்ள கொரோனா தொற்றுநோய் (COVID 19) நிலைமையினுள் இலங்கையானது மிக வெற்றிகரமாக அந்நிலைமைகளைக் கட்டுப்படுத்தியும் சாதாரண மக்களின் வாழ்க்கையை வழமையான நிலையில் கொண்டுநடாத்துவதற்குத் தடை ஏற்படாதவாறு சகல மக்கள் சேவைகளையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக அரசதுறை போன்று சகல தனியார் துறைகளினதும், அரசதுறையின் தலையீட்டுடன் தகுந்ததொரு திறமுறைக்கமைய முகாமை செய்கின்றது என்பதைக் கவனத்தில்கொண்டும்,

உலகளாவிய தொற்றுநோய் நிலைமையினுள் அனைத்துலகப் போக்குகள் மாற்றமடைந்துள்ள பின்னணியிலும், வெளிநாட்டு வழங்கல் நிறுத்தப்படும் நிலைமையினுள் உள்ளூர் உணவு உற்பத்திகள் உட்பட சகல உள்ளூர் கைத்தொழில்களையும் உயர்வடையச் செய்தல்போன்று இயன்ற எல்லாத் துறைகளினதும் ஏற்றுமதிகளை மேம்படுத்தி புதியதொரு பொருளாதார வேலைத்திட்டமொன்றை தாபிப்பது அத்தியாவசியமானதென்பதாலும்,

கடந்த காலகட்டத்திற்குள் உள்நாட்டுப் பொருளாதார சக்திகள், சர்வதேசக் கோட்பாடுகளுள் தகுந்தவாறு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாத காரணத்தினாலும் கிராமிய மக்கள், பெருந்தோட்டச் சமூகம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நகரப்புற மக்களின் திறன்கள், ஆற்றல்கள் மற்றும் விசேட ஆற்றல்களைப்போன்று பலவீனங்கள் மற்றும் சவால்களினால் அம்மக்களின் எதிர்பார்ப்புகள் உடைந்துபோவதற்கு இடமளிக்காது மக்களின் எதிர்பார்ப்புகளை வலுவாக்குவதற்கு தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் என்பவற்றின்மீது புதிய அரசின் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாதலாலும்,

உலகப் பொருளாதாரப் போக்குகளுள், வருங்காலத்தில் இலங்கை அடையவேண்டிய பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க சக்தி, விசமற்ற உணவு உற்பத்திகள் போன்றவற்றை விஸ்தரிக்கும் அபிலாசைகளைப்போன்று வறுமை மற்றும் வறியவர், செல்வந்தர் என்னும் இடைவெளி அதிகரிக்கும் போக்கு என்பவற்றைக் குறைத்து மாவட்ட மட்டத்தில் சமமான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கான தேவை தெளிவாக இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

பாதுகாப்பானதும், சுபீட்சமானதுமான தேசமொன்றுக்காகச் சொல்லப்பட்ட அபிவிருத்தியானது பொருளாதார இலக்குகளை அடையும்போது வறுமையானது மிகவும் முக்கியமான பின்னோக்கிய காரணி என்பதால் மக்கள் மையமான பொருளாதாரமொன்றை அடிப்படையாகக்கொண்ட கிராமிய சமூகத்தை வலுவூட்டுவதற்கான முறைகளின் தேவைப்பாடு முன்பில்லாதவாறு ஏற்பட்டுள்ளதாதலாலும்,

"சுபீட்சத்தின் நோக்கு" அரச கொள்கைச் சட்டத்தின்மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களினுள் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் சிறப்பாக வரிசைப்படுத்தும் தேவைக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டியுள்ளதாதலாலும்,

கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் சுகாதார வசதிகள் மற்றும் கல்வி வசதிகள் என்பவற்றை விரிவுபடுத்தி, மக்களின் சுகாதாரம், சிறந்த உணவு நுகர்வு மற்றும் சூழல் பாதுகாப்பு என்பவைபோன்று, மாணவர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்களுக்காக வேறொரு சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்து சுகாதாரம், கல்வி மற்றும் திறன்கள் தொடர்பான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

மத்திய அரசின் அமைச்சுகள், மாகாணசபைகள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் போன்ற அரச இயந்திரத்தினுடாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களைப் புத்தெழுச்சி செய்வதுடன் கிராமிய, தோட்ட மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களை தொழில்முயற்சியாளர்களாகத் தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டும் முயற்சிக்கு உடனடியாக இணைத்துக் கொள்வதற்காக உரியவாறு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களூடாக நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி புதிய பொருளாதார அணுகுமுறையொன்றினூடாக பொருளாதாரச் சட்டகமொன்றைத் தாபிப்பது அத்தியாவசியமானதாதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, மேற்குறிப்பிட்ட தங்களை அதாவது,

1. திரு.பசில் ராஜபக்ஷ
சனாதிபதியின் விசேட பிரதிநிதி

2. கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்கள்
சிரேட்ட பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

3. லுதினன் ஜெனரால் சவேந்திர த சில்வா அவர்கள்
பாதுகாப்பு பதவிநிலை பிரதானி / தரைப்படை

4. திரு.டி.சி.விக்கிரமரத்ன பதில் பொலிஸ்மா அதிபர்

5. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சாந்த திசாநாயக்க
தலைவர், நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை

6. திரு.ஜே.ஏ.நுஷாட் எம் பெரேரா
தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்

7. திரு.சுசந்த ரத்நாயக்க
தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை

8. திரு.ஜயந்த டி சில்வா
தலைவர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

9. திருமதி. கிமாலி பெர்ணாந்து
தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

10. திரு.ஜயம்பதி மொல்லிகொட
தலைவர், இலங்கை தேயிலைச் சபை

11. திரு.பிரபாத் சுபசிங்க
தலைவர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

12. திரு.ஏ.விமலவீர
தொழில் ஆணையாளர் நாயகம்

13. திரு.எஸ்.சிங்கப்புலி
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

14. ரியல் அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

15. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜி.விஜித ரவிபிரிய அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்

16. திரு.பந்துல திலகசிறி
பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

17. திரு.சஞ்ஜய மொஹொட்டால
பணிப்பாளர் நாயகம், இலங்கை முதலீட்டுச் சபை

18. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுதந்த ரணசிங்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

19. திரு.மஹேஷ் கம்மம்பில
பணிப்பாளர், உரச் செயலகம்

20. திரு.புத்திக மடிஹஹேவா
முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

21. திரு.ரொஹான் செனெவிரத்ன
மேலதிக முகாமையாளர், இலங்கை மின்சார சபை

22. திரு.மனோ சேகரம்
பணிப்பாளர் சபை உறுப்பினர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

23. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா

24. திரு.சஞ்ஜீவ குணவர்த்தன
நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ.டப்ளிவ். கிறீசி மற்றும் கம்பனி

25. திரு.சமந்த குமாரசிங்க
தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

26. திரு.மஹேஷ் அமலியன்
தலைவர், மாஸ் ஹோல்டிங்ஸ்

27. கலாநிதி ரவி லியனகே அவர்கள்
தலைவர், ரைகம் நிறுவனம்

28. திரு.பத்மலால் லியனகே
முகாமைத்துவப் பணிப்பாளர், சென்மிக் சமூக வியாபாரம்

29. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்

30. பிரதமரின் செயலாளர் மற்றும் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள், பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவம், மின்சக்தி மற்றும் வலுசக்தி, மகளிர், சிறுவர் அலுவல்கள் மறறும் சமூகப் பாதுகாப்பு, மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள், பாதுகாப்பு, உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை, வெளிநாட்டு தொடர்புகள் ஆகிய அமைச்சுகளின் செயலாளர்கள்

பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்கான செயலணியின் உறுப்பினர்களாக பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. உலகம் முழுவதிலும் பரவியுள்ள கொரோனா தொற்றுநோய் நிலைமையினுள் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார, சமூக சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பவற்றின்மீது முக்கிய கவனம் செலுத்தி, 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு புதிய அணுகுமுறைகளினூடாக இலங்கைக்குத் தனித்துவமான பொருளாதாரச் சட்டகமொன்றைத் தயாரிப்பதன்மூலம் உற்பத்திப் பொருளாதாரமொன்றுக்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து பின்வரும் விடயங்கள்மீது முக்கிய கவனம் செலுத்தி தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

i. உள்நாட்டுக் கைத்தொழிலாளர்கள், தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் மக்களை மையமாகக்கொண்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்காக ஒன்றிணைந்த நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல். அதன்போது உள்நாட்டுக் கமத்தொழில் உற்பத்திகள், கமத்தொழில் உற்பத்திகள் மற்றும் ஏனைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களைப் புதிய தொழில்நுட்ப முறைகளுக்கமைய செயற்படுத்தலும் ஏற்றுமதிகளை வலுவூட்டுவதற்கும், இறக்குமதி மாதிரி உற்பத்திகளை விரிவாக்கல் மற்றும் உற்பத்திப் பொருளாதாரத்தை பன்முகப்படுத்துவதற்கும் தேவையான செயல்நெறிகளைத் தயாரிப்பதன்மூலம் வர்த்தக இடைவெளியைக் குறைத்தல்.

ii. நெல், தானியங்கள், மரக்கறி, பழவகைகள், மீன், இறைச்சி, பால் மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்யும் பண்ணை நடவடிக்கைகளுக்காக கமக்காரர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்,

iii. தேயிலை, இறப்பர், தேங்காய், கறுவா, மிளகு ஆகிய ஏற்றுமதி தோட்ட உற்பத்திகள், சிறந்த தேயிலை, தேங்காய் எண்ணெய், பலசரக்குப் பொருட்கள் போன்றவற்றைப் புதிய தொழில்நுட்பப் பயன்பாட்டினுள் பெறுமதி சேர்ப்பதன்மூலம் உச்சகட்ட பொருளாதாரப் பங்களிப்புக்கு ஈடுபடுத்தல் மற்றும் ஏற்றுமதியின்பால் ஈர்ப்பதற்காகத் தேயிலைச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து செயற்படுதல்.

iv. உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் வலையமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக லங்கா சதொச, சதொச, கூட்டுறவுக் கட்டமைப்பு மற்றும் மாக்-பெட் நிறுவனங்களின் வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக புதிய தொழில்நுட்ப மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதலும் ஏனைய தேவையான வசதிகளை வழங்குதலும் கூட்டிணைத்தலும்.

v. பாரம்பரிய கைத்தொழில்களுக்குப் புதிய தொழில்நுட்பத்தை ஒன்றிணைத்து சந்தைவாய்ப்புகளுக்கு ஏற்றவாறு புத்தாக்கப்படுத்தல். மேலும், பாரம்பரிய சட்டகத்திற்கு அப்பாற்சென்று தற்போதுள்ள உலகப் பொருளாதார நிலைமைகளினுள் புதிய வருமானம் ஈட்டும் முறைகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியை இலக்காகக்கொண்டு பால், முட்டை, தேங்காய், பலசரக்குப் பொருட்கள், கருவாடு மற்றும் நீண்டநாள் பாவிக்கக்கூடிய உணவு உற்பத்திகள் மற்றும் புடைவைகள், முகக் கவசங்கள், அலங்காரப் பொருட்கள் மற்றும் உர உற்பத்தித் துறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

vi. நகர, அரை நகர, கிராமிய மற்றும் தோட்டப் பிரதேசங்களை அண்டிவாழும் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அத்தரப்படுத்தலினுள் ஒவ்வொரு மக்கள் பிரிவினருக்கும் தனித்துவமான வருமானத்தை ஈட்டக்கூடிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல். அதற்காக உரிய ஏனைய நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதன்மூலம் தேவையான நிதி ரீதியான ஏற்பாடுகள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல், செயற்படுத்துதல் மற்றும் தொடராய்வு செய்தல்.

vii. நிர்வாக மாவட்டங்களில் புதிய பொருளாதார உற்பத்திகளை அதற்கிணையான சலுகை நிலைமைகளினுள் இனங்காணுதல் மற்றும் அந்த மாவட்டங்களில் உற்பத்தித் துறைகளை மேம்படுத்துவதன்மூலம் விவசாய உற்பத்திகள், கமத்தொழில், தொழில்நுட்ப மற்றும் திட்டங்களை விரிவுபடுத்திச் சுயதொழில் உள்ளிட்ட தொழில் மேம்பாடு மற்றும் வறுமையை ஒழித்தலுக்குத் தேவையான திறமுறைகளைத் தயாரித்தல்.

viii. அடிமட்டத் துறைசார்ந்த பணிகளில் ஈடுபடும் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து முறையான மற்றும் பயனுறுதியான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய திறமுறைகளைத் தயாரித்து நடைமுறைப் படுத்துதல்.

ix. சரியான தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான சேவைகளை வழங்குதலும் சேவைகளை இருமுறை வழங்குவதைத் தடுப்பதற்காக ICTA மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட வலையமைப்பினூடாக மத்தியமயப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் தரவு அலகொன்றினைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

x. சுற்றுலாக் கைத்தொழிலுக்காக முடிந்தளவு தேசிய உற்பத்திகளை வழங்குவதன்மூலம் அக்கைத்தொழிலில் தேசிய சேர்க்கப்பட்ட பெறுமதியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களைச் சுற்றுலாச்சபையுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

xi. அடிமட்டத்திலான உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை நேரடியாகப் பொருளாதார நீரோட்டத்துக்கு இணைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அறிவுறுத்தல்களைச் வழங்குதல்.

xii. கொவிட் - 19 தொற்றுப்பரவல் இடர்நிலைமை இல்லாதொழியும்வரை ஊழியர் செயலணியின் அதிகபட்சமானோருக்கு வீடுகளிலிருந்து கடமைகளில் ஈடுபட வேண்டியிருப்பதனால், அப்பிரிவினர்களுள் அதிகூடிய பொருளாதார ரீதியிலான பயனைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வழிநடத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய திறமுறைகளைத் தயாரித்தல் மற்றும் அதன் சாத்தியத்தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்றவாறு மக்களை மையமாகக்கொண்ட டிஜிட்டல் நிர்வாக முறைமையொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

xiii. கொவிட் - 19 இடர்நிலையினால் ஏற்பட்டுள்ள புதிய பூகோள பொருளாதார முன்னேற்றத்தினூடாகப் பொருளாதார ரீதியான இலாபகரமான சந்தர்ப்பங்களை இனங்காணுதல் மற்றும் அதனூடாகப் பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திகளை வலுப்படுத்துவதற்கான திறமுறைகளைத் தயாரித்தல்.

xiv. ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்திற்காக அடையாளம் கண்டுள்ள ஒரு இலட்சம் வறிய குடும்பங்களுக்காக நிலையான வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கமத்தொழில் உற்பத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதனூடாக அவர்கள் நிரந்தர வருமானம் பெறும் குடும்பங்களாவர் என்பதுடன் தேசிய உற்பத்தியை விரிவுபடுத்தலும்.

xv. முக்கியமாக கிராமிய, தோட்ட மற்றும் அரை நகரப் பிரதேசங்களை அண்டிவாழும் மக்களுக்குப் பண்புத்தரமான வீதித்தொகுதிகளை வழங்குவதற்காக ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நெடுஞ்சாலைகள் அமைச்சு, மாகாணசபைகள் மற்றும் பிரதேச சபைகளின் ஒருங்கிணைப்புடன் நிர்மாணத்துறையினூடாக வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.

xvi. கிராமிய, தோட்ட, அரை நகர பிரதேச மக்களைத் திருப்திப்படுத்துமுகமாக 150,000 நீர்வழங்கல் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யும் நோக்கில் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் நீர்வழங்கல் சபையுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.

xvii. பயிர்ச் செய்கைகளின் பாவனைக்காக கிராமிய குளங்களின் புனரமைப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு என்பற்றுக்காக நீரின் அளவை அதிகரிப்பதைப்போன்று, தரிசு வயல்நிலங்களை வேளாண்மைக்கு உட்படுத்துதல் மற்றும் நெற்செய்கை செய்யப்படாத தரிசு நிலங்களில் மரக்கறி, கீரைவகைகள், மிருக உணவுக்கான மேய்ச்சல் நிலம், பூக்கன்றுகள் பயிர்ச்செய்கை போன்ற நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

xviii. சிறிய அளவிலான தொழில் அபிவிருத்தி, சுயதொழில், உள்ளக கைத்தொழில் அபிவிருத்தி தொடக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கி வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு, பிரதேச அபிவிருத்தி வங்கி, சமுர்த்தி வங்கி, கூட்டுறவு வங்கிகள், வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் நுண்பாக நிதி நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகொண்டு குறைந்த வருமானம் பெறும் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதிவசதி பெற்றுக் கொள்ளும் முறைமைகளை இனங்கண்டு நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்தல்.

xix. வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே இனங்காணப்பட்ட கமத்தொழில் மற்றும் தொழில் அபிவிருத்திக்காக முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரங்கள் ஒரு இலட்சத்தினை வழங்குவதற்காக காணி அமைச்சு, காணி ஆணையாளர் திணைக்களம் மற்றும் 'பிம்சவிய' நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

xx. சுதேச வைத்திய வசதிகள் மற்றும் சுதேச மருந்துகள் உற்பத்தி என்பவற்றை விஸ்தரித்தல் மற்றும் மேல்நாட்டு அத்தியாவசிய மருந்துகள் உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு ஆடைகள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி என்பவற்றை வலுவூட்டுவதற்காக ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களம் மற்றும் வரை.மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றுடன் இணைந்து செயற்படுதல்.

xxi. தொழில்வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கக்கூடிய வகையில் மிக முக்கியமான முதலீட்டுக் கருத்திட்டங்களைத் (Flagship Projects) தனிமைப்படுத்துகை வேலைத்திட்டங்களுக்கமையச் செயற்படுவதற்கு முதலீட்டுச் சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து தேவையான வசதிகளை அளித்தல்.

xxii. அடிமட்டத்தின் சேவை வழங்கல்களை வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினருக்கு உரியவாறு பெற்றுக்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.

xxiii. அரச மற்றும் தனியார் விதை மற்றும் நாற்று மேடைப் பண்ணைகளை ஊக்குவித்தலும், கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக விதைகள், நாற்றுகள், உரம், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதற்குக் கமத்தொழில் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், சமுர்த்தி அதிகாரசபை, கூட்டுறவுக் கமத்தொழில் சங்கங்கள், கமக்காரர் அமைப்புகள், தனியார் விதை உற்பத்தி நிறுவனங்கள் என்பவற்றை வழிநடத்துதல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல்,

xxiv. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை, சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவிப்பை பிரசித்தப்படுத்தல், வீட்டுத்தோட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல், முடிந்தளவு சுய நுகர்வு திட்டத்தின்மீது ஈடுபடுவதற்காக கிராமிய பரந்த சேவைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை வழிநடாத்துதல்,

xxv. கொழும்பைச் சூழவுள்ள கிராமியப் பகுதிகள் உள்ளிட்ட நாட்டின் சகல சமுர்த்தி நன்மைபெறுநர் குடும்பங்களையும் இணைத்து அவர்களின் வீடுகளை அண்டியுள்ள நிலத்துண்டுகளில் தென்னை, ஈரப்பலா, பலா போன்ற நீண்டகால பயிர்வகைகள், வாழை, பப்பாசி, தோடை, எலுமிச்சை போன்ற பழவர்க்கங்கள் மற்றும் அன்றாட தேவைக்கான மரக்கறிகளைப் பயிரிடுவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான நாற்றுகள் மற்றும் பயிர்ச்செய்கை ஆலோசனைகளை வழங்குவதுடன் அவ்வேலைத்திட்டங்களை சமுர்த்தி அதிகாரசபை, கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக வழிநடத்துதல்.

xxvi. மேற்போந்த மூலோபாயங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக சகல அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், விசேடமாக வங்கிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஊடகத்துறைகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

xxvii. தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும் தாபனரீதியான சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை (CSR) இயன்றளவில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத் திட்டத்துடன் இணைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல்.

xxviii. பல்வேறு சர்வதேச வங்கிகள் மற்றும் நிதியங்களினால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளை இவ்வேலைத் திட்டத்தை வெற்றிபெறுவதற்காகப் ஈடுபடுத்தப்படும் நிறுவனங்கள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுதல்.

xxix. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சமுர்த்தி வங்கி கிளைகளின் மூலம் கமக்காரர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை வழங்குவதற்குத் தற்போதுள்ள பல்வேறு திட்டங்களை இலகுபடுத்தி சகல வங்கிக் கிளைகளிலும் கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்திக்காக அதிக நிதி வசதிகளை மாவட்ட மட்டத்தில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வழிநடத்துதல்.

2. கொரோனா தொற்றுநோய் நிலைமையினுள் சாதாரண மக்கள் வாழ்க்கையை வழமையான நிலையில் நடத்திச் செல்வதற்காக சுகாதாரம் மற்றும் கல்விசார் செயலணிகளின் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, உரிய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பின்வரும் துறைகளின்மீது முக்கிய கவனம் செலுத்தி உற்பத்திகளை விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

அ. கமத்தொழில்சார்ந்த உற்பத்திகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களைப் பாவனையாளர்களுக்கு உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல பொருளாதார மத்திய நிலையங்கள், லங்கா ச.தொ.ச, கூட்டுறவு வர்த்தக வலையமைப்பு, கார்கில்ஸ், கீல்ஸ், ஆர்பிகோ, லாவ் வர்த்தக வலையமைப்பு என்பவற்றை ஏற்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்,

ஆ. பொருளாதார மத்திய நிலையங்கள் முடிந்தளவு விநியோக மத்திய நிலையமாக பன்முகப்படுத்தப்பட்டு தமக்குக் கிடைக்கும் கமத்தொழில் உற்பத்திகளை அதே பிரதேசங்களில் உள்ள பாவனையாளர்கள் போன்று நகர் பிரதேசங்களில் உள்ள பாவனையாளர்களுக்கும் குடும்ப மட்டத்தில் வழங்குவதற்கான விநியோக நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்,

இ. அத்தியாவசியமான உலர் உணவுகள், மருந்துகள் என்பவற்றின் இறக்குமதி போன்று ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, துப்புரவேற்பாட்டு ஆடைகள் போன்ற ஏற்றுமதிகளை இலகுபடுத்துவதற்காக இலங்கைத் துறைமுகம், இலங்கைச் சுங்கம், நிறுவனரீதியான வங்கி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அரச ஒழுங்குறுத்துகை நிறுவனங்களின் கூட்டிணைப்பு மற்றும் முக்கிய தீர்மானங்களைச் செயற்படுத்துதல்,

ஈ. அரிசி, தேங்காய், தேயிலை, மாமிச உணவுகள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உணவு என்பவற்றைக் கொண்டுசெல்வதற்குத் தேவையான போக்குவரத்துக்காக எரிபொருள், பாதுகாப்புச் சேவைகள், வங்கி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,

உ. அத்தியாவசிய சேவைகள், பொருட்கள் மற்றும் பொருட்களைப் பாவனையாளர்களுக்கு வழங்கும் லொறி, முச்சக்கரவண்டிகள், பாடசாலை வான்கள், பேரூந்துகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றின் ஓட்டுநர்கள், கூலி வாகனச் சாரதிகள் மற்றும் அன்றாட சேவைகளை வழங்கும் உதவியாளர்களுக்கு சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான எரிபொருட்களைப் பெறுவதற்குப் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலத்தினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களைத் திறந்து வைத்தல் மற்றும் தேவையான எரிபொருளை வழங்குதல்,

ஊ. மாகாண ஆளுநர்களுடன் இணைந்து கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் குப்பைகளை அகற்றுதல், வீதிகள் மற்றும் பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல், வாரச் சந்தைகள், வர்த்தக நிலையங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ளுவதற்காக பொதுச் சுகாதார பரீட்சகர்களின் மற்றும் உரிய உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்று ஏற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

எ. மேற்போந்த வசதிகளை வழங்கும்போது, மகளிர், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், ஊனமுற்ற நபர்கள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் உடனடியாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நபர்களுக்காக விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ஏ. சகல வங்கிக் கிளைகளிலும் கொடுக்கல்வாங்கல் செய்வோரின் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளக்கூடிய வகையில் அத்தியாவசிய வங்கிச் சேவைகளை மேற்கொள்ளுவதற்கு மற்றும் நடமாடும் சேவைகளைப்போன்று தபால் திணைக்களத்தின் சேவைகளைப் பெற்று மக்கள் சேவையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

மேலும், சனாதிபதியின் விசேட பிரதிநிதி, பசில் ராஜபக்ஷ அவர்களை செயலணியின் தலைவராகவும்,

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மேலதிகச் செயலாளர் அன்ரன் பெரேரா மற்றும் திரு.டி.எஸ்.ஜயவீர ஆகியோரை மேற்போந்த செயலணியின் இணைச் செயலாளர்களாகவும் நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களை தேடிப்பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்கான செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்கான செயலணியின் உறுப்பினர்களுக்கான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்கான செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், 2020 சனவரி மாதம் 24 மற்றும் 2020 மாச்சு மாதம் 24 ஆகிய திகதிகளில் வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணிகள் மற்றும் 2020 மாச்சு மாம் 23 ஆந் திகதிய கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டுவதில் அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வுவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்கான சனாதிபதி செயலணி என்பவற்றைத் தாபித்தல் தொடர்பான சனாதிபதியின் பணிப்புரைகளை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.